தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com


RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 44 | 4 Pages | 13.9.2024 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 44 | 4 பக்கங்கள் | 13.9.2024 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்**
**அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு**

**விளக்கம்:**
தவம் செய்கின்றவரே தமக்குரிய கடமையைச் செய்கின்றவர் ஆவர், அவர் அல்லாத மற்றவர் ஆசை வலையில் அகப்பட்டு வீண் முயற்சி செய்கின்றவரே.

## குஜராத்தில் மர்ம காய்ச்சலுக்கு 15 பேர் பலி: ரத்த மாதிரிகள் சோதனை

காந்திநகர், செப். 13

குஜராத் மாநிலத்தில் சமீபத்தில் பெய்த மழையால் பல்வேறு பகுதிகளில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. பல இடங்களில் மழைநீர் வடியாமல் தேங்கி நிற்கிறது. இந்தநிலையில் கட்ஜ் மாவட்டத்தில் பலர் திடீரென்று காய்ச்சலால் பாதிக்கப்பட்டனர். இந்த மர்ம காய்ச்சல் வேகமாக பரவியதால் ஏராளமானோர் பாதிக்கப்பட்டனர். இதையடுத்து காய்ச்சலை கட்டுப்படுத்த மாநில அரசு தீவிர நடவடிக்கை எடுத்தது.

கட்ச் லக்பத் மற்றும் அப்தாசா தாலுகாவில் உள்ள 7 கிராமங்களில் கடந்த 3ந்தேதி முதல் 10ந்தேதி வரை மொத்தம் 15 பேர் மர்ம காய்ச்சலால் உயிரிழந்துள்ளனர். இதில் 7 பேர் குழந்தைகள்.

இதுதொடர்பாக அம்மாவட்ட கலெக்டர் அமித் அரோரா கூறுகையில், "இறந்தவர்களின் ரத்த மாதிரிகளை புனேவில் உள்ள தேசிய வைராலஜி நிறுவனத்திற்கு அனுப்பி, இறப்புக்கான காரணத்தை கண்டறிய உள்ளோம். முடிவுகள் ஓரிரு நாட்களில் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது அறியப்பட்ட வைரசா அல்லது புதியதா என்பதை அறிய முடிவுகளுக்காக காத்திருக்க வேண்டும்

இதுவரைமேற்கொள்ளப்பட்டசோதனைகளில்எச்1என்1,பன்றிக்காய்ச்சல், கிரிமியன்காங்கோ காய்ச்சல், மலேரியா மற்றும் டெங்கு போன்ற நோய்கள் வருவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. இறப்புகள் மாசுபாடு அல்லது தொற்று நோயால் ஏற்பட்டதாகத் தெரியவில்லை " என்று தெரிவித்தார்.

மேலும் பாகிஸ்தான் எல்லையை ஒட்டியுள்ள லக்பத்தில் 22 கண்காணிப்பு குழுக்கள் மற்றும் டாக்டர்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## 2 பெண் நடனக் கலைஞர்களை துப்பாகி முனையில் கடத்தி பலாத்காரம் செய்த கும்பல்

கோரக்பூர், செப். 13

உத்தரபிரதேசமாநிலம் கோரக்பூர் மாவட்டத்தை சேர்ந்த 2 பெண் நடனக் கலைஞர்கள் ராம்கோலா பகுதியில் உள்ள ஒரு வீட்டில் தங்கியிருந்தனர். சம்பவத்தன்று இரவு காரில் வந்த மர்ம நபர்கள் சிலர் 2 பெண் நடனக் கலைஞர்களையும்வீட்டில்இருந்துகடத்திசென்றனர்.பின்னர்கப்தங்கஞ்ச் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் வைத்து 2 பெண் நடனக் கலைஞர்களையும் 8 பேர் கொண்ட கும்பல் கூட்டு பலாத்காரம் செய்தது.

இதனையடுத்து அங்கிருந்து தப்பிய பெண் நடனக் கலைஞர்கள் தங்களுக்கு நேர்ந்த அவலம் குறித்து போலீசில் புகார் அளித்தனர். அதன் பேரில் வழக்குப் பதிவு செய்த போலீசார் நடனக் கலைஞர்கள் கற்பழிக்கப்பட்ட வீட்டுக்கு சென்று சோதனை நடத்தினர். பின்னர் அந்த வீட்டில் இருந்த 8 பேரை போலீசார் அதிரடியாக கைது செய்தனர். வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த துப்பாக்கிகள் உள்ளிட்ட ஏராளமான ஆயுதங்களை போலீசார் கைப்பற்றினர்.

இந்த சம்பவம் தொடர்பாக எஸ்பி (குஷிநகர்) சந்தோஷ் குமார் மிஸ்ரா கூறுகையில், "குற்றம் சாட்டப்பட்ட 8 பேரும் 30 வயதுக்கு குறைவானவர்கள். குஷிநகர்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டஅவர்கள், நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டனர். இரண்டு பெண்களின் வாக்குமூலங்கள்தற்போதுமாஜிஸ்திரேட்முன்பதிவுசெய்யப்பட்டுள்ளன. அவர்களின் மருத்துவ பரிசோதனை முடிந்து அதன் அறிக்கைக்காக காத்திருக்கிறோம்" என்று அவர் கூறினார்.

இதுகுறித்துஅதிகாரிகள்கூறுகையில்,விசாரணையின்போது,நண்பனின் பிறந்தநாளைக்கொண்டாடுவதற்காகதாங்கள்அவரது வீட்டில்இருந்ததாக கைதான நபர்கள் தெரிவித்தனர். குடித்துவிட்டு, நடன நிகழ்ச்சிக்கு ஆர்கெஸ்ட்ரா பார்ட்டியை அமர்த்த முடிவு செய்தனர். நேரம் தாமதமானதையடுத்து பெண்கள் நிகழ்ச்சியை நடத்த மறுத்ததால், அவர்கள் துப்பாக்கி முனையில் பெண்களை கடத்திச் சென்றனர்" என்று அவர்கள் கூறினார்.

## 2 பெண் நடனக் கலைஞர்களை துப்பாகி முனையில் கடத்தி பலாத்காரம் செய்த கும்பல்



சியோல்,செப். 13

அணு ஆயுதங்களை தாங்கிச்செல்லும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை சோதனை செய்து உலக நாடுகளுக்கு அவ்வப்போது அதிர்ச்சி கொடுத்து வரும் நாடு வடகொரியா.

கொரிய தீபகற்பத்தில் வடகொரியா தென்கொரியா இடையே பல ஆண்டுகளாக மோதல் நீடித்து வருகிறது. தன் எதிரி நாடுகளாக கருதும் தென்கொரியா,ஜப்பான்,அமெரிக்காவைசீண்டும்வகையில்வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனை நடத்தி வருகிறது. மேலும், தங்கள் நாட்டின்இறையாண்மைக்குஅச்சுறுத்தல்வந்தால்தாக்குதல்நடத்துவோம் என வடகொரியா எச்சரித்து வருகிறது.

இதனிடையே, அமெரிக்கா மற்றும் எதிரி நாடுகளை சமாளிக்க அணு ஆயுதப்படை தயார் நிலையில் இருப்பது உறுதி செய்யும் என வடகொரிய அதிபர் கிம் சமீபத்தில் தெரிவித்தார்.

இந்நிலையில், வடகொரியா இன்று மீண்டும் ஏவுகணை சோதனை நடத்தியுள்ளது என்று தென்கொரியா தெரிவித்துள்ளது. வடகொரியா இன்று காலை பாலிஸ்டிக் ஏவுகணையை ஏவி சோதனை நடத்தியதாகவும், ஏவுகணை வடகிழக்கு கடல் பகுதியில் விழுந்ததாகவும் தென்கொரியா தெரிவித்துள்ளது. இந்த ஏவுகணை சோதனையால் கொரிய தீபகற்பத்தில் மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

# கல்வி தரத்தில் இந்தியாவிலேயே தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது: தமிழக அரசு பெருமிதம்

சென்னை, செப். 13

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் 2021ல் முதல்அமைச்சராகப் பொறுப்பேற்றது முதல் தமிழ்நாட்டுக் குழந்தைகள் ஒவ்வொருவரும் தரமான உயர்ந்த கல்வி பெறவேண்டும் எனப் பல்வேறு புதிய திட்டங்களை உருவாக்கி வருகிறார்கள்.

பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம்:

தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவரும். தலைசிறந்த கல்வியாளருமான பேராசிரியர் அன்பழகன் அவர்களின் நூற்றாண்டு விழாவைப் போற்றும் வண்ணம் பள்ளிக் கல்வித் துறையின் வளர்ச்சிக்கென ரூ.7,500 கோடி மதிப்பீட்டில் பேராசிரியர் அன்பழகனார் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் என்ற மாபெரும் திட்டத்தை ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்த அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி தமிழகத்தில் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதலாக வகுப்பறைகள். ஆய்வகங்கள். கழிவறைகள், சுற்றுச்சுவர்கள், மாணவ/மாணவிகளுக்கு தங்கும் விடுதிகள் அமைக்க பள்ளிக் கல்வி இயக்ககம் மூலம் 2022 2023ம் நிதியாண்டில் நபார்டு கடனுதவித் திட்டம் RIDF XXVIIIன் கீழ் ரூ.813 கோடி செலவில் 418 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு 2394 கூடுதல் வகுப்பறைகள், 57 ஆய்வகங்கள், 10 மாணவ/மாணவிகள் தங்கும் விடுதிகள் ஏற்படுத்தவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்:

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் 15.9.2022 அன்று மதுரையில் தொடங்கி வைக்கப்பட்டு, 1,545 பள்ளிகளைச் சேர்ந்த 1 லட்சத்து 14 ஆயிரம் குழந்தைகள் பயன்பெற்றனர். முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் பிறந்த ஊராகிய திருக்குவளையில் 25.8.2023 அன்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினால் தொடங்கி வைக்கப்பட்டு, 30 ஆயிரத்து 992 அரசுத் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 18 லட்சத்து 50 ஆயிரம் குழந்தைகள் பயன்பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், இந்த ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் இத்திட்டம் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையில், முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், 15.7.2024 அன்று பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளில், திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் ஒன்றியம், கீழச்சேரி கிராமத்தில் உள்ள புனித அன்னாள் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தைத் தமிழ்நாடுஅரசின்சார்பில்தொடங்கி வைக்கப்பட்டு மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தப்பட்டது.



காலை உணவுத் திட்டத்தின் மூலம் தற்போது தமிழ்நாடு முழுவதிலும் மொத்தம் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் காலை உணவைச் சூடாகவும் சுவையாகவும் உண்டு மகிழ்ச்சியோடு பள்ளிப் பாடங்களில் கவனம் செலுத்தினர்.

அரசுப் பள்ளிகளில் கல்வித் தரத்தினை மேம்படுத்த ரூ.1,086 கோடியில் 614 பள்ளிகளில் 3,238 வகுப்பறைகள் கட்டுமான பணிகள் நடந்து வருகிறது. 21 அறிவியல் ஆய்வகங்கள், உட்கட்டமைப்புகள் மேம்பாடு செய்யப்பட்டுள்ளன. ரூ.551.411 கோடியில் 28,794 பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள். ரூ.436.746 கோடியில் 8,863 பள்ளிகளில் உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள். மத்திய அரசின் உயர்கல்வித் துறை மந்திரியின் பாராட்டு:

புதுடெல்லியில் 13.8.2024 அன்று மத்திய அரசின் உயர்கல்வித் துறை மந்திரி தர்மேந்திர பிரதான் அவர்கள் வெளியிட்டுள்ள தேசிய கல்வி நிறுவனங்களுக்கான தர வரிசைப்பட்டியலில் இடம்பெற்றுள்ள செய்திகள் தமிழ்நாட்டின் பெருமையை மேலும் மேலும் உயர்த்தியுள்ளன.

அதாவது, தேசிய அளவில் தர வரிசைப்படுத்தப்பட்ட 926 கல்லூரிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த கல்லூரிகள் மட்டும் 165. அதற்கு அடுத்த நிலைகளில் டெல்லியில் 88 கல்லூரிகள், மகாராஷ்டிரத்தில் 30 கல்லூரிகள், கர்நாடாகாவில் 78 கல்லூரிகள், உத்தரப்பிரதேசத்தில் 71 கல்லூரிகள், அசாம் மாநிலத்தில் 15 கல்லூரிகள், மத்தியப் பிரதேசம், சண்டிகர், ஜார்கண்ட் ஜம்மு காஷ்மீர் ஆகிய மாநிலங்களில் தலா 12 கல்லூரிகள் எனத் தரவரிசைப்படுத்தப்பட்டு உயர்கல்வியில் தலைசிறந்து விளங்குவது தமிழ்நாடு என்பதைத் தெள்ளத்தெளிவாகக் காட்டுகிறது.

புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம், திறன்மிகு வகுப்பறைகள், உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள், காலை உணவுத் திட்டம், இடைநிலை ஆசிரியர்களுக்கு கைக் கணினிகள் இப்படிப் பல்வேறு புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதன் பயனாக அரசுப் பள்ளிகளுக்கு வரும் மாணவமாணவியர் எண்ணிக்கை உயர்ந்து, கல்வித் தரத்தில் இந்தியாவில் தமிழ்நாடு சிறந்த மாநிலமாக விளங்குகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## விழுப்புரம் மாவட்ட வட்டாட்சியர் அலுவலகத்தில் நாளை குறைதீர் முகாம்

விழுப்புரம், செப். 13

வட்டாட்சியர் அலுவலகத்தில் நாளை குறைதீர் முகாம் நடைபெற உள்ளது.

பொது விநியோகத்தில் டத்தின் சேவைகளை அனைத்து மக்களுக்கும் வழங்குவதன் பொருட்டு விழுப்புரம் மாவட்டத்தில்வருகின்ற14.09.2024. சனிக்கிழமை ஒவ்வொரு வட்டாட்சியர் அலுவலகத்திலும் தனி வட்டாட்சியர் (கு.பொ)/வட்ட வழங்கல் அலுவலர்களால் குறைதீர் முகாம் நடத்தப்படயுள்ளது. இக்குறைதீர் முகாமில் குடும்ப பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம்,

முகவரி மாற்றம், புதிய குடும்ப அட்டை/நகலட்டை கோரும் மனுக்களை பதிவு செய்தல் ஆகிய சேவைகளை வேண்டி முகாமில் கோரிக்கை களையும் கை பேசி எண் பதிவு/மாற்றம் செயலுக்கான தனியான கோரிக்கை மனு வினையும், முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் அங்கீகாரச்சான்று கோரும் கோரிக்கை மனுவினையும் பொது விநியோக கடைகளின் செயல்பாடுகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் தரம் குறித்து புகார்களையும், தனியார் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் மற்றும் சேவை குறைபாடுகள் குறித்த புகா ர்களையும் குடும்ப அட்டைதாரர்கள் தனி வட்டாட்சியர் (கு.பொ)/ வட்ட வழங்கல் அலுவலர்களிடம் கொடுக்கலாம். மேற்படி, இந்த நல்ல வாய்ப்பினை பயன்படுத்திக்கொண்டு பொது விநியோகத்திட்ட தொடர்பான தங்களது குறைகளுக்கு தீர் காணலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் சி.பழனி தெரிவித்துள்ளார்.



## மயிலாப்பூர் நிதி நிறுவன மோசடி தொடர்பாக 3,000 பேர் புகார்: காவல்துறை தகவல்

சென்னை, செப். 13

மயிலாப்பூர் நிதி நிறுவன மோசடி தொடர்பாக 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் புகார் அளித்துள்ளதாக காவல்துறை தகவல் தெரிவித்துள்ளது. ரூ.24 கோடி மோசடி என கூறப்பட்ட நிலையில் ரூ.301 கோடி அளவுக்கு புகார்கள் வந்துள்ளதாக காவல் துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## சென்னையில் போதை தடுப்பு நடவடிக்கை 3 நாட்களில் 334 பேர் அதிரடி கைது

சென்னை, செப். 13

சென்னையில் போதைப்பொருள் விற்பனை மற்றும் கடத்தல் தொடர்பான புகாரின் பேரில் 3 நாட்களில் 334 பேர் கைதுசெய்யப்பட்டு உள்ளனர். இது தொடர்பாக காவல் துறை தரப்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது;

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஆ.அருண். இ.கா.ப அவர்கள் சென்னை பெருநகரில் கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்களுக்கு எதிராக சிறப்பு அதிரடி சோதனைகள் மேற்கொண்டு கைது செய்ய உத்தர விட்டதன்பேரில், கடந்த 06.09.2024 முதல் 08.09.2024 வரையிலான 3 நாட்கள் "போதை தடுப்பு நடவடிக்கை" (Drive against Drugs) மூலம் சிறப்பு அதிரடி சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்கள் கடத்தி வருபவர்கள் மற்றும் விற்பனை செய்பவர்களை கைது செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த அதிரடி நடவடிக்கையினால், 3 நாட்களில் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்கள் தொடர்பாக 195 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 334 குற்றவாளிகளை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைக்கப்பட்டனர். இவர்களில் 58 சரித்திரப்பதிவேடு போக்கிரிகள் அடங்குவர்.

சட்டவிரோதமாக கஞ்சா மற்றும் போதை பொருட்கள் கடத்தி வருபவர்கள் மற்றும் விற்பனை செய்பவர்கள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## கனிமொழிக்கு எதிரான தேர்தல் வழக்கு: சுப்ரீம் கோர்ட்டில் விசாரணை

புதுடெல்லி, செப். 13

கடந்த 2019ம் ஆண்டு நடந்த நாடாளுமன்ற தேர்தலில் தி.மு.க. சார்பில் தூத்துக்குடி தொகுதியில் போட்டியிட்டு கனிமொழி எம்.பி. வெற்றி பெற்றார். வேட்புமனுவில் கணவரது வருமானத்தை தெரிவிக்காததால், கனிமொழியின்வெற்றியை ரத்து செய்யக்கோரிதூத்துக்குடி தொகுதியை சேர்ந்த வாக்காளர் சந்தானகுமார் என்பவர் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்தார்.

இதை நீதிபதிகள் அஜய் ரஸ்தோகி, பேலா எம்.திரிவேதி அடங்கிய அமர்வு கடந்த ஆண்டு (2023) மே 4ந்தேதி விசாரித்தது. இந்த வழக்கின் இறுதி விசாரணையின்போது, மனுதாரர் தரப்பில், "வேட்பாளரின் கணவர் சிங்கப்பூர் அல்லது வேறு எந்த நாட்டில் வேலை செய்தாலும், மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் அடிப்படையில், அவரின் வருமானத்தை அறிய வாக்காளர்களுக்கு அனைத்து உரிமையும் உள்ளது. ஆனால் வேட்பாளர் அதை வழங்கத் தவறியுள்ளார்" என்று வாதிடப்பட்டிருந்தது.

அப்போது கனிமொழி தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், "கேட்கப்பட்டுள்ள அனைத்து தரவுகளும் வேட்பு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 5 லட்சம்வாக்காளர்கள்நான்வேட்புமனுவில்தெரிவித்துள்ள தரவுகளின் அடிப்படையில் எனக்கு வாக்களித்துள்ளனர். எனவே தன் மீதான வழக்கு விசாரணையை தடை செய்ய வேண்டும்" என வாதிடப்பட்டிருந்தது. அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள் கனிமொழியின் மேல்முறையீட்டு மனுவை ஏற்று, அவரது தேர்தல் வெற்றியை எதிர்த்து சந்தானகுமார் தொடர்ந்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

பின்னர் இந்த தீர்ப்பை மறுஆய்வு செய்யக்கோரி சந்தானகுமார் சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்தார். இந்நிலையில் இந்த மனுவை நீதிபதிகள் சஞ்சீவ் கன்னா, பேலா எம். திரிவேதி ஆகியோர் அடங்கிய அமர்வு இன்று (வியாழக்கிழமை) விசாரிக்க உள்ளது.

# ஓணம் பண்டிகை: உப்பள்ளிகொச்சுவேலி இடையே இன்று சிறப்பு ரெயில் இயக்கம்

சென்னை, செப். 13

ஓணம் பண்டிகையை முன்னிட்டு பயணிகளின் கூட்ட நெரிசலை தவிர்ப்பதற்காக எஸ்.எஸ்.எஸ். உப்பள்ளி (ஸ்ரீசித்தரோட சுவாமி உப்பள்ளி)கொச்சுவேலி (கேரளா) இடையே ஒருமுறை இயங்கும் வகையில் சிறப்பு ரெயில் இயக்கப்படுகிறது.

அதன்படி, எஸ்.எஸ்.எஸ். உப்பள்ளிகொச்சுவேலி சிறப்பு ரெயில் (வண்டி எண்: 07333) இன்று காலை 6.55 மணிக்கு உப்பள்ளியில் இருந்து புறப்பட்டு மறுநாள் காலை 6.45 மணிக்கு கொச்சுவேலியை சென்றடையும். மறுமார்க்கமாக கொச்சுவேலி எஸ்.எஸ்.எஸ். உப்பள்ளி சிறப்பு ரெயில் (07334) நாளை மறுநாள் (சனிக்கிழமை) கொச்சுவேலியில் இருந்து மதியம் 12.50 மணிக்கு புறப்பட்டு மறுநாள் மதியம் 12.50 மணிக்கு உப்பள்ளியை வந்தடையும்.

இந்த ரெயில்கள் இரு மார்க்கமாகவும் ஹாவேரி, ராணிபென்னூர், ஹரிகர், தாவணகெரே, பீரூர், அரிசிகெரே, துமகூரு, சிக்கபானவாரா, எஸ்.எம்.வி.டி. பெங்களூரு, கே.ஆர். புரம், பங்காருபேட்டை, சேலம், ஈரோடு, திருப்பூர், கோவை, பாலக்காடு, திருச்சூர், ஆலுவா, எர்ணாகுளம் டவுன், கோட்டயம், திருவள்ளா, செங்கனூர், காயன்குளம் மற்றும் கொல்லம் ஆகிய ரெயில் நிலையங்களில் நின்று செல்லும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

# இணையவழி சூதாட்டம், விளையாட்டு சமூகத்தில் தீய தாக்கங்களை ஏற்படுத்துகிறது: முருகானந்தம் பேச்சு

சென்னை, செப். 13

சென்னை சாந்தோமில் நகராட்சி நிர்வாக இயக்குநரக கூட்ட அரங்கில் தமிழ்நாடு இணையவழி விளையாட்டு ஆணையம் சார்பில் 'இணையவழி விளையாட்டுகளால் ஏற்படும் பாதிப்புகள்'குறித்த விழிப்புணர்வு பிரசாரத்தை தலைமைச் செயலாளர் முருகானந்தம் தொடங்கி வைத்தார்.

அதன்பின்னர் தலைமைச் செயலாளர் முருகானந்தம் பேசியதாவது:

இணையவழி சூதாட்டம், இணையவழி விளையாட்டு சமூகத்தில் தீய தாக்கங்களைஏற்படுத்துகிறது. கொரோனா காலகட்டத்தில் இணையவழி சூதாட்டம், விளையாட்டுகள் இளைஞர்கள், குழந்தைகள் மத்தியில் பரவியது. தமிழ்நாடு இணையவழி



விளையாட்டு ஆணையம் இதனை ஒழுங்குபடுத்தி வருகிறது. திமுக அரசு இணையவழி சூதாட்ட விளையாட்டுகளை தடுக்க சட்டம் இயற்றியது. இது தொடர்பாக பெற்றோர்கள் குழந்தைகளை கண்காணிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# சிதம்பரம்: கார் , லாரி நேருக்குநேர் மோதி விபத்து; ஒரேகுடும்பத்தை சேர்ந்த 5 பேர் பலி

சிதம்பரம், செப். 13

சென்னையில் இருந்து மயிலாடுதுறைக்கு ஒரேகுடும்பத்தை சேர்ந்த 5 பேர் காரில் சென்றுகொண்டிருந்தனர். கார் இன்று அதிகாலை சிதம்பரம் பு.முட்லூர் புறவழிச்சாலையில் சென்றுகொண்டிருந்தது.

அப்போது, சிதம்பரத்தில் இருந்து கடலூர் நோக்கி சென்றுகொண்டிருந்த லாரியும், காரும் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானது. இந்த கோர விபத்தில் காரில் பயணித்த ஒரேகுடும்பத்தை சேர்ந்த 5 பேரும் உடல்நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தனர். தகவலறிந்து விரைந்து வந்த போலீசார் உயிரிழந்தவர்களின் உடல்களைமீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்த விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல்

சென்னை, செப்.13

தமிழக மீனவர்கள் எல்லைதாண்டி மீன்பிடித்ததாகக் கூறி இலங்கை கடற்படையால் கைது செய்யப்படுவதும், தாக்குதல் நடத்தப்படுவதும் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றது. மீனவர்களின் படகுகளைப் பறிமுதல் செய்து அரசுடைமையாக்குவது போன்ற நடவடிக்கைகளையும் இலங்கை அரசுமேற்கொண்டு வருகிறது.



இந்த நிலையில், நாகை மாவட்டம் ஆற்காட்டுத்துறையை சேர்ந்தமீனவர்கள் பைபர் படகில் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். நடுக்கடலில் மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்களின் படகின் மீது மோதி தாக்குதல் நடத்தி உள்ளனர். மேலும் படகில் ஏறி ஆயுதங்களால் தாக்கியுள்ளனர்.

அதோடு 5 லட்சம் மதிப்புள்ள 700 கிலோ வலைகளை பறித்துக்கொண்டு மீனவர்களை விரட்டி அடித்துள்ளனர். இதையடுத்து உடனடியாக மீனவர்கள் அவசரமாக கரைக்குத் திரும்பினர். இந்த தாக்குதலில் கார்த்தி, சண்முகம், ராமையன், தேவராஜ் உட்பட 4 மீனவர்கள் காயம் அடைந்துள்ளனர். காயம் அடைந்தவர்கள் வேதாரண்யம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த சம்பவம் குறித்து வேதாரண்யம் கடலோர காவல் குழும போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இது தமிழக மீனவர்கள் மத்தியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

# பாம்பன் புதிய ரெயில் பாலம்: அடுத்த மாதம் போக்குவரத்து துவக்கம்



மண்டபம், செப். 13

தமிழகத்தின் தென்கிழக்கு பகுதியில் வங்காள விரிகுடாவில் பாக் ஜலசந்தியில் அமைந்துள்ளது பாம்பன் ரெயில் பாலம். ராமேசுவரம் தீவை இந்தியாவின் பெரும் நிலப்பரப்புடன் இணைக்கும் வகையில் கடந்த 1914ம் ஆண்டுதிறக்கப்பட்டது. கடல் வழி வணிகத்தில் நம் நாடு தழைத்தோங்கிய காலத்தில் இந்த ரெயில் பாலம் முக்கிய பங்கு வகித்துள்ளது. அதற்கேற்ப கப்பல்கள் செல்லும் வகையில் பாலத்தின் நடுப்பகுதியில் தண்டவாளத்தை இரண்டாக பிரிப்பது போன்று தூக்குகள் அமைக்கப்பட்டிருந்தன. 2.05 கி.மீ. நீளமுள்ள இது இந்தியாவின் முதல் கடல் பாலம் என்ற பெயரையும் பெற்றது.

நூற்றாண்டை கடந்து பழமையான பாலம் ஆகிவிட்டதால் கடந்த 2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23ந்தேதி முதல் அந்த பாலத்தில் ரெயில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. இதற்கிடையே ரூ.545 கோடியில் புதிய பாலம் கட்டும் பணி பல்வேறு கட்டங்களாக நடந்தது. இப்பணிகள் இறுதிக்கட்டத்தை நெருங்கி உள்ளன. பாலத்தின் நடுவே கப்பல்கள் கடந்து செல்ல வசதியாக தூக்குப்பாலமும் அமைக்கப்பட்டு உள்ளது. பாம்பன் புதிய ரெயில் பாலம் எப்போது பயன்பாட்டுக்கு வரும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டு இருக்கிறது.

பல்வேறு கட்ட சோதனை ஓட்டங்கள் முடிந்துள்ளன. நவீன தொழில்நுட்பத்தில் அமைத்த தூக்குப்பாலத்தை திறந்து மூடி, ரெயில்களை இயக்குவதற்கான சோதனை நடத்தப்பட இருக்கிறது. மேலும் ரெயில் போக்குவரத்து பாதுகாப்பு கமிஷனரின் ஆய்வும் நடக்க உள்ளது.


அவரது ஆய்வு முடிந்து ரெயில் இயக்க ஒப்புதல் வழங்கப்பட்டால் அடுத்த மாதம் (அக்டோபர்) முதல் அந்த பாதையில் மீண்டும் ரெயில்கள் இயக்கப்படும் என்று தெரிகிறது. அதே நேரத்தில் அக்டோபர் 2ந்தேதி காந்தி ஜெயந்தியையொட்டி அல்லது அக்டோபர் 15ந் தேதி பாம்பன் பாலத்தை தொடங்கி வைக்கும் விழா நடக்கலாம் என தெரிகிறது.

இதற்கிடையே புதிய பாம்பன்ரெயில்பாலத்தை பிரதமர் மோடி திறந்து வைக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. அத்துடன் பிரதமர் மோடி, சென்னை விமான நிலையம் மற்றும் பல திட்டங்களையும் திறந்து வைக்க இருப்பதாகவும் கூறப்படுகிறது. இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# ககன்யான் 6வது கட்ட என்ஜின் சோதனை வெற்றி

நெல்லை, செப். 13

நெல்லை மாவட்டம் பணகுடி அருகே உள்ள காவல்கிணறு மகேந்திரகிரியில் இஸ்ரோ மையம் செயல்பட்டு வருகிறது. இங்கிருந்து விண்ணில் விண்கலம் செலுத்துவதற்கு தேவையான கிரையோஜெனிக் என்ஜின், விகாஷ் என்ஜின், பி.எஸ்.4 என்ஜின் தயாரிக்கப்பட்டு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



மேலும் விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் ககன்யான் திட்டத்தில் விண்ணில் செலுத்தப்பட இருக்கும் ராக்கெட்டுகளில் மனிதன் விண்ணிற்கு சென்று விட்டு மீண்டும் பூமிக்கு திரும்புவதற்காக எஸ்.எம்.எஸ்.டி.எம். என்ற மாடலிங் என்ஜின் சோதனை பல்வேறு கட்டங்களாக இங்கு நடந்து வருகிறது.

அதன்படி 6வது கட்டமாக 1,900 வினாடிகள் சோதனை நடத்த இஸ்ரோ திட்டமிட்டது. அதற்கான கவுண்ட்டவுன் ஆரம்பிக்கப்பட்டு சோதனை நிர்ணயிக்கப்பட்ட இலக்கை வெற்றிகரமாக அடைந்தது. இந்த சோதனையை மகேந்திரகிரி இஸ்ரோ மைய இயக்குனர் ஆசீர் பாக்யராஜ் நேரில் பார்வையிட்டார்.

திருவனந்தபுரம் திரவ இயக்க திட்ட மைய இயக்குனர் நாராயணன், ககன்யான் திட்ட இயக்குனர் மோகன் ஆகியோர் திருவனந்தபுரத்தில் இருந்து காணொலிக் காட்சி மூலமாக பார்வையிட்டனர். இந்த சோதனை வெற்றிகரமாக நடந்ததாக இஸ்ரோ வட்டாரம் மகிழ்ச்சி தெரிவித்துள்ளது.

# தகாத உறவால் விபரீதம்: பெண் மற்றும் இளைஞர் தற்கொலை

கிருஷ்ணகிரி, செப். 13

கிருஷ்ணகிரி மாவட்டம் குறிஞ்சி கங்காபுரத்தைச் சேர்ந்த ஜே.சி.பி ஓட்டுநரான சிவகுமாருக்கும், அதே பகுதியைச் சேர்ந்த திலகவதி என்பவருக்கும் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது. இவர்களுக்கு ஒரு குழந்தை உள்ள நிலையில் சிவகுமார் கடந்த சில மாதங்களாக டெல்லியில்தங்கி வேலை பார்த்து வந்துள்ளார்.

இந்த நிலையில் மனைவிக்கு உதவுமாறு ஊரில் உள்ள தனது நண்பரான ஹரீஷிடம், சிவகுமார் கேட்டுக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து அடிக்கடி சிவக்குமாரின் வீட்டுக்குச் சென்று வந்த ஹரீஷுடன் திலகவதிக்கு தகாத உறவு ஏற்பட்டு இருக்கிறது. இதனை அறிந்த சிவகுமார் மனைவியைக் கண்டித்து தாய் வீட்டிற்கு அனுப்பியுள்ளார். அங்கு திலகவதி தூக்குபோட்டு தற்கொலை செய்து கொண்டார். இதனை அறிந்த ஹரீஷும் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

முன்னதாக திலகவதியின் உடலை போலீசாருக்கு தெரிவிக்காமல் சிவகுமார் தரப்பு அடக்கம் செய்ய முயன்றனர். இதுகுறித்து தகவல் அறிந்த போலீசார் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகளை மத்திய அரசு தொடங்க வேண்டும்: வைகோ கோரிக்கை

சென்னை, செப். 13

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

மக்கள் தொகை கணக்கெடுப்பை மேற்கொள்ளும் முறை, மாதிரி வடிவமைப்பு, கணக்கெடுப்புக்கான கருவிகள் உள்ளிட்டவை குறித்து மத்திய அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்காக பொருளாதார நிபுணரும், முன்னாள் தலைமை புள்ளியியல் நிபுணருமான பிரணாப் சென் தலைமையில் 14 பேர் கொண்ட புள்ளியியல் நிலைக்குழுவை மத்திய பா.ஜனதா அரசு 13.7.2023 அன்று அமைத்தது.

தற்போது இந்த நிலைக்குழுவை மத்திய அரசு கலைத்திருக்கிறது. முறையான காரணம் இன்றி நிலைக்குழு உறுப்பினர்களுக்கு கூட தகவல் அளிக்காமல், குழுவை மத்திய அரசு கலைத்துள்ளது. புள்ளியியல் நிலைக்குழுவின் தலைவரிடம் கூட கலந்து ஆலோசனை மேற்கொள்ளாமல் திடீரென்று குழுவை மத்திய அரசு கலைத்திருப்பது பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்துகிறது.



சமூகநீதியை முறையாக செயல்படுத்த மக்கள் தொகை கணக்கெடுப்புடன் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வருகிறது.

இந்த நிலையில் மத்திய அரசு புள்ளியியல் நிலைக்குழுவை கலைத்து, மக்கள் தொகை கணக்கெடுப்பு மேலும் தாமதமாகும் சூழலை திட்டமிட்டே ஏற்படுத்தி வருவது ஏற்கத்தக்கதல்ல. மத்திய அரசு உடனடியாக மக்கள் தொகை கணக்கெடுப்புபணிகளைதொடங்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கீழடி 10ம் கட்ட அகழாய்வில் சுடுமண் செங்கல் சுவர் கண்டுபிடிப்பு

சிவகங்கை, செப். 13

சிவகங்கை மாவட்டம் கீழடியில் 10ம் கட்ட அகழாய்வு பணி நடைபெறும் நிலையில், தற்போது வரை ஒன்பது குழிகள் தோண்டப்பட்டுள்ளன. ஒரு குழியில் அகழாய்வு மேற்கொண்டபோது, சுமார் 2 அடி ஆழத்தில் சுடுமண் செங்கல் கட்டுமான சுவர் கண்டுபிடிக்கப்பட்டது.



அதில் இருக்கும் ஒவ்வொரு செங்கலும் சுமார் 32 சென்டி மீட்டர் நீளமும், 23 சென்டி மீட்டர் அகலமும், 6 சென்டிமீட்டர் உயரமும் கொண்டுள்ளது. தொடர்ந்து கீழடியில் அகழாய்வு பணிகளை தொல்லியல் துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஹஜ் பயணம்: விண்ணப்பிக்க கால அவகாசம் நீட்டிப்பு

சென்னை, செப். 13

ஹஜ் எனும் புனித பயணம் இஸ்லாத்தின் ஐந்து கடமைகளில் ஒன்றாகும். அனைத்து இஸ்லாமியர்களும் ஒரு முறையாவது இந்த பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. அதன்படி, ஒவ்வொரு ஆண்டும் உலகின் பல்வேறு பகுதிகளைச்சேர்ந்த லட்சக்கணக்கான இஸ்லாமியர்கள் மெக்காவிற்கு புனித ஹஜ் பயணம் மேற்கொள்கின்றனர்.

இந்நிலையில் இந்த ஆண்டிற்கான புனித ஹஜ் பயணிகள் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கும் கடைசி தேதியை 23.9.2024 வரை இந்திய ஹஜ் குழு நீட்டித்துள்ளது. ஆன்லைன் விண்ணப்பத்தை, இந்திய ஹஜ் குழு இணையதளம் www.hajcommittee.gov.in வழியாக அல்லது செல்போனில் 'ஹஜ் சுவிதா' என்ற செயலியை பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்யலாம். இதில் கூடுதல் விவரங்கள் அறிய, இந்திய ஹஜ் குழு இணையதள முகவரியான www.hajcommittee.gov.in என்ற இணையத்தை தொடர்பு கொள்ளலாம். இந்த தகவலை பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச்செயலாளர் வெளியிட்டுள்ளார்.

# பாணனுக்காக அங்கம் வெட்டிய திருவிளையாடல் லீலை

மதுரை, செப். 13

சுவாமி தங்க ரிஷப வாகனத்திலும், அம்மன் வெள்ளி ரிஷப வாகனத்திலும் எழுந்தருளினர்.

உலகப் புகழ்பெற்ற மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவிலில் பல்வேறு சிறப்புகள், திருவிளையாடல்கள்நிறைந்த ஆவணி மூலத் திருவிழா நடைபெற்று வருகிறது. சிவபெருமானின் திருவிளையாடல்களை விளக்கும் வகையில் சிறப்பு அலங்காரம் தொடர்ந்து நடைபெறுகிறது.



கருங்குருவிக்கு உபதேசம், நாரைக்கு மோட்சம், மாணிக்கம் விற்ற திருவிளையாடல், தருமிக்கு பொற்கிழி அருளிய திருவிளையாடல், உலவாக் கோட்டை அருளிய லீலை ஆகிய அலங்காரங்களைத் தொடர்ந்து நேற்று, பாணனுக்காக அங்கம் வெட்டிய திருவிளையாடல் லீலை நடைபெற்றது.

பாணனுக்காக சென்று அங்கம் வெட்டிய திருவிளையாடல் அலங்காரத்தில் கம்பத்தடி மண்டபத்தில் சுவாமி எழுந்தருளினார். அங்கு சுந்தரேசுவரர் வேடம் அணிந்து கோவில் பட்டர் கையில் கேடயம், வாளுடன் இந்த திருவிளையாடலை நடித்து காண்பித்தார். இரவில் சுவாமி தங்க ரிஷப வாகனத்திலும், அம்மன் வெள்ளி ரிஷப வாகனத்திலும் எழுந்தருளி ஆவணி வீதிகளில் வலம் வந்து அருள்பாலித்தனர்.

விழாவின் சிகர நிகழ்ச்சியாக சுந்தரேசு வரர் பட்டாபிஷேகம் நடைபெறுகிறது.

# விஜய் கட்சியுடன் பா.ஜ.க. கூட்டணியா? எல்.முருகன் விளக்கம்

திருப்பூர், செப். 13

திருப்பூரில் விநாயகர் சிலை ஊர்வலத்தை மத்திய இணை மந்திரி எல். மந்திரி தொடங்கி வைத்தார். இதனை தொடர்ந்து செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த அவர் கூறியதாவது,

தமிழகத்தில் மக்கள் கிராமங்கள் , நகரங்கள் என ஒவ்வொரு தெரு முனையிலும் விநாயகரை வழிபடுகின்றனர். தமிழகம் ஆன்மீக பூமி; இங்கு போலி திராவிடத்திற்கு இடமில்லை. என தெரிவித்தார்.



விஜய் தற்போது தான் கட்சி தொடங்கி உள்ளார். இது ஜனநாயக நாடு. யார் வேண்டுமானாலும் கட்சி தொடங்கலாம் விஜய் கட்சியுடன்பா.ஜ.க.கூட்டணி வைக்குமா என்பதை கட்சித் தலைமை தான் முடிவு செய்யும் . என தெரிவித்தார்

# தலைமுடியை இழுத்து தாக்கப்பட்ட அருப்புக்கோட்டை பெண் டிஎஸ்பி காயத்ரி திடீர் மாற்றம்.. பின்னணி



விருதுநகர், செப். 13

தலைமுடியை இழுத்து தாக்கப்பட்ட விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை துணை காவல் கண்காணிப்பாளர் காயத்ரி திடீரென பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். அருப்புக்கோட்டைக்கு புதிய காவல் காணிப்பாளராக மதிவாணன் நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார். டிஎஸ்பி காயத்ரி ஏன் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டார்.. அதன் பின்னணி என்ன என்பது பற்றி இந்த பதிவில் பார்ப்போம்.

ராமநாதபுரம் மாவட்டம் கமுதி பெருமாள் தேவன் பட்டியை சேர்ந்த 35 வயதாகும் காளிகுமார் டிரைவர் ஆவார். இவர் அண்மையில் திருச்சுழியை நோக்கி வாகனத்தில் சென்று கொண்டிருந்தார்.

அப்போது, திருச்சுழி ராமேஸ்வரம் சாலையில் கேத்த நாயக்கன்பட்டி விளக்கு அருகே காளிகுமார் சென்றபோது இரு பைக்கில் வந்த 4 பேர் கொண்ட கும்பல் காளிகுமாரை திடீரென வழிமறித்து கொடூரமாக ஆயுதங்களால் தாக்கியது.

இதில் படுகாயம் அடைந்த காளிகுமார் சுருண்டு விழுந்தார்.. இதைப்பார்த்த பொதுமக்கள் மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முயன்றனர். ஆனால், வழியிலேயே காளிகுமார் உயிர் பிரிந்து விட்டது. இதையடுத்து அவரது உடலை பிரேத பரிசோதனை செய்வதற்காக அரசு மருத்துவமனைக்கு போலீசார் அனுப்பி வைத்தனர். விசாரணையையும் மேற்கொண்டனர்.

இனிடையே காளிகுமாரின் உறவினர்கள் மற்றும் சக டிரைவர்கள் ஆத்திரமடைந்து, மருத்துவமனையில் குவிந்து, கொலையாளியை கைது செய்ய கோரி முழக்கமிட்டனர்.. அத்துடன், திருச்சுழி அருப்புக்கோட்டை சாலையில் திடீர் மறியலிலும் ஈடுபட்டனர். இதனால், விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை டிஎஸ்பி காயத்ரி, மறியல் நடந்த இடத்திற்கு விரைந்து வந்து, போராட்டக்காரர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினார்.

அப்போது அங்கிருந்த இளைஞர் ஒருவர் டிஎஸ்பி காயத்ரியை தகாத வார்த்தைகளில் பேசியதுடன், தகராறிலும் ஈடுபட்டுள்ளார். எனவே, அந்த இளைஞரை அங்கிருந்து அப்புறப்படுத்த டிஎஸ்பி காயத்ரி முயன்றார். அப்போது திடீரென அந்த இளைஞர், பெண் டிஎஸ்பி காயத்ரியை தாக்க துவங்கி விட்டார்.. இதைப்பார்த்து அதிர்ச்சி அடைந்த சக காவலர்கள், அந்த இளைஞரை சுற்றிவளைத்து விட்டனர்.

ஆனால், அதற்குள் போராட்டக்காரர்கள் பெண் டிஎஸ்பி காயத்ரி, மற்ற போலீசார் மீதும் தாக்குதல் நடத்தினார்கள். இதில் ஒரு சிலர் டிஎஸ்பி காயத்ரியின் தலைமுடியை இழுத்து பிடித்து தாக்கினார்கள். இதனால் அந்த இடமே பதற்றமாக மாறியது. இது தொடர்பாக வீடியோக்கள் வெளியான நிலையில், டிஎஸ்பிஐ தாக்கியதாக கூறப்படும் ராமநாதபுரம் அருகேயுள்ள நெல்லிகுளம் பாலமுருகன் (43) என்பவரை போலீஸார் கைது செய்தனர். அதேபோல, பொன்குமார், காளிமுத்து, சஞ்சய்குமார், பாலாஜி, ஜெயக்குமார், ஜெயசூர்யா ஆகிய 6 பேரையும் போலீஸார் கைது செய்தனர்.

இதற்கிடையே தலைமுடியை இழுத்து தாக்கப்பட்ட விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை துணை காவல் கண்காணிப்பாளர் காயத்ரி திடீரென பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். அருப்புக்கோட்டை புதிய துணை டிஎஸ்பி மதிவாணன் நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

டிஎஸ்பி காயத்ரி திடீரென மாற்றப்பட்டது குறித்து போலீஸ் அதிகாரிகள் கூறுகையில், 'டிஎஸ்பி காயத்ரி கடந்த ஆகஸ்ட் 27ந்தேதியே இடம் மாறப்பட்டார். அதாவது கட்சி பேரணியின் போது சரியான அணுகுமுறை இல்லை என அவர் மீது சிலர் குற்றச்சாட்டு தெரிவித்தனர். இதற்கிடையே, அருப்புக்கோட்டையில் உள்ள காவல் நிலையங்களில் பெண் அதிகாரிகள் அதிகம் உள்ளனர். எனவே இந்த காரணங்களால் காயத்ரி மாறப்பட்டு இருந்த நிலையில், அதற்கு பின்னர் தான் அவர் தாக்கப்பட்ட சம்பவமும் நடந்தது. எனவே அந்த சம்பவத்துக்கும், காயத்ரி இடமாறத்துக்கும் தொடர்பு இல்லை' என்று கூறினார்கள்.

# தலைமுடியை இழுத்து தாக்கப்பட்ட அருப்புக்கோட்டை பெண் டிஎஸ்பி காயத்ரி திடீர் மாற்றம்.. பின்னணி



சென்னை, செப். 13

ஊரகப்பகுதிகளில் 5,000 நீர்நிலைகளை புனரமைக்க ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்து முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளதாக ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அறிவித்துள்ளார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

"தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி, நீர்நிலைகளை தூர்வாரி, மழைநீரை சேகரித்து நீர் மேலாண்மை செய்வதற்கு முன்னுரிமை அளித்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 22,051 சிறுபாசன ஏரிகளில் முதற்கட்டமாக நடப்பாண்டில் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5,000 சிறுபாசன ஏரிகளை புனரமைப்ப தற்காக 5.9.2024 அன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, சிறுபாசன ஏரிகள் இயந்திரங்களைப் பயன்படுத்தி தூர்வாருதல் மற்றும் ஆழப்படுத்துதல், உபரிநீர்போக்கி (கலிங்கு), மதகு போன்ற அனைத்துக் கட்டமைப்புகளையும் பழுதுபார்த்தல் அல்லது புனரமைத்தல், இணைப்பு வரத்து வாய்க்கால்களை தூர்வாருதல் ஆகியவற்றை பொதுமக்கள் பங்கேற்புடன் செயல்படுத்துவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இந்த நீர்நிலைகளை புனரமைப்பதால், நீர்நிலைகளின் கொள்திறன் அதிகரிக்கும். நிலத்தடி நீர் மட்டம் உயரும். வேளாண் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படும். உபரி நீர் வீணாவதையும் தடுக்கும். சிறுபாசன ஏரிகளின் கொள்ளளவினை மேம்படுத்தி புனரமைப்பதன் மூலம் வெள்ளம் மற்றும் வறட்சி ஆகிய இரண்டையும் தடுக்கும். பேரிடர் மேலாண்மை முயற்சிகளுக்கு இத்திட்டம் முக்கிய பங்களிப்பு வழங்கும்.

மேம்படுத்தப்படும் ஏரிகளில் தேவைப்படும் கட்டுமானப் பணிகளான வரத்து மற்றும் போக்குக் கால்வாய், கலிங்கு, மதகு மறுசீரமைக்கும் பணிகள் தேவைப்படின் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் மேற்கொள்ளப்படும். சிறுபாசன ஏரிகளின் கரைகளை பலப்படுத்தி, பசுமைச் சூழலை ஏற்படுத்த பனை மற்றும் உள்ளூர் வகை மரக்கன்றுகள் நடப்படும்.

இத்திட்டம், அரசு மற்றும் அரசு சாரா நிறுவனம், சமூக அமைப்புகள், விவசாயிகள் சங்கம், கல்வி நிறுவனங்கள் போன்றவற்றின் சொந்த நிதி ஆதாரம் மற்றும் மக்கள் பங்களிப்புடன் கூடிய நமக்கு நாமே திட்டம் மூலமாகவும் மற்றும் மீதமுள்ள சிறுபாசன ஏரிகளுக்கு அரசு நிதி மற்றும் ஊராட்சி அமைப்புகளின் நிதியின் மூலமாகவும் பணிகள் நிறைவேற்றப்படும்.

ஆயக்கட்டுதாரர்கள் மற்றும் பயன்பாட்டாளர் அமைப்புகளுடன் சேர்ந்து சிறுபாசன ஏரிகளின் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். ஆயக்கட்டுதாரர்கள் மற்றும் பயன்பாட்டாளர் அமைப்பு இல்லாத பட்சத்தில், புதியதாக பயன்பாட்டாளர்கள் குழுக்கள் அமைத்து புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் மூலம் ஊரகப் பகுதி விவசாயிகள் பெருமளவில் பயன்பெறுவதோடு நிலத்தடி நீர்மட்டமும் கணிசமாக உயரும்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பதக்கம் மற்றும் பாராட்டு சான்றிதழ்கள்: அமைச்சர் வழங்கினார்



நாமக்கல், செப் .13

நாமக்கல் மாவட்டம், கீரம்பூர், பி.ஜி.பி. கல்லூரி அரங்கில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் ஆகியோர், நாமக்கல் மாவட்ட கலெக்டர் ச.உமா, தலைமையில், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர். ஈஸ்வரன், நகரமைப்பு மண்டல திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எம்.மதுரா செந்தில் ஆகியோர் முன்னிலையில், மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பதக்கம் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்ததாவது,

நாமக்கல் மாவட்டத்தில் சுமார் 15 ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து 8 வட்டங்களாக பிரித்து 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு 86 வகையான விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன. மேற்கண்ட போட்டிகளில் 42,320 மாணவ, மாணவியர்கள் பங்கு பெற்று 8 வட்டத்தில் சுமார் 16,560 மாணவ, மாணவியர்கள் வெற்றி பெற்றுள்ளனர். இப்போட்டிகளை சிறப்பாக ஒருங்கிணைந்த நமது ஆசிரியர் பெருமக்களுக்கு எனது பாராட்டுகளை தெரிவித்து கொள்கிறேன். மேலும் விளையாட்டில் வெற்றி பெற்றவர்கள் மற்றும் விளையாட்டில் பங்கேற்ற அனைத்து மாணவ செல்வங்களுக்கும் எனது பாராட்டுகளை தெரிவித்து கொள்கிறேன்.

மேலும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடைபெற்ற மாநில அளவிலான கிரிக்கெட் லீக் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற ஆசிரியர்களுக்கும் எனது பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறேன் என பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் அட்மா குழுத்தலைவர் தனராசு, முதன்மை கல்வி அலுவலர் திருமதி ப.மகேஸ்வரி, மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்க கல்வி) (பொ) திரு.ரவி செல்வம், தாளாளர் திரு.கணபதி உட்பட உள்ளாட்சி பிரதிநிதிகள், துறைசார்ந்த அலுவலர்கள், விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

# ராசிமணலில் அணை கட்ட தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்: பிரேமலதா விஜயகாந்த்



சென்னை, செப். 13

தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழ்நாட்டில் 6 கோடி மக்களின் குடிநீர் ஆதாரமாகவும், சுமார் 22 லட்சம் ஏக்கர் விளைநிலங்களுக்கு பாசன நீர் ஆதாரமாகவும் விளங்கும் காவிரி உரிமையை மீட்டெடுக்க நாம் ஒன்றுபட்டு போராட வேண்டிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. குறிப்பாக கர்நாடக அரசு மேகதாது அணை கட்டி தமிழ்நாட்டில் உபரி நீர் கடலில் கலக்க செய்வதைத்தடுத்து நிறுத்தி, கர்நாடகாவிற்கு குடிநீர் போக, மீதத் தண்ணீரைத் தமிழ்நாட்டிற்கு வழங்குவோம் என்கிற தவறான பொய் பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகிறது. கர்நாடக அரசு அணை கட்டுவதற்கான வரைவு திட்ட அறிக்கையைத் தயார் செய்து மத்திய அரசிடம் வழங்கி அதற்கான அனுமதி கோரித் தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னதாக மேட்டூர் அணை நிரம்பிய பிறகு காவிரியில் உபரி நீர் கடலில் கலப்பதைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு உடனடியாக மேகதாது அணைகட்ட அனுமதி கோரி மத்திய அரசை கர்நாடக அரசு நிர்ப்பந்தித்து வருகிறது. பெங்களூர் கனகபுரா தேசிய நெடுஞ்சாலையில்

பெங்களூருக்குக் கிழக்கே 90 கிலோ மீட்டர் தொலைவில் கர்நாடக நிலப்பகுதியில் இருந்து கீழ்நோக்கி ஆயிரம் அடிக்கு கீழே காவிரியும், அர்க்காவதி நதிகளும் இணையும் சங்கமம் என்கிற இடம் சுற்றுலா தலமாக விளங்குகிறது.

இங்கிருந்து காவிரி நதி தமிழகம் நோக்கிப் பயணிக்கத் தொடங்கும் வழியில் உயர்ந்த மலை முகடுகளுக்கிடையே அகலம் குறைவான மிக ஆழமான நதியாகவும் உள்ள இடம் மேகதாது ஆகும். இவ்விடத்தில் அமைந்துள்ள காளி கோவில் முதல் தமிழ்நாடு எல்லை துவங்குகிறது. இடது கரை முழுமையும் கிருஷ்ணகிரி வன எல்லைக்கு உட்பட்டது. வலது கரை முழுமையும் ஒகேனக்கல் வரை கர்நாடக எல்லையில் உள்ளது. நீர்வழி பாதையில் காவிரி ஆறு தமிழ்நாட்டின் கட்டுப்பாட்டுக்குள் வருகிறது. தமிழ்நாட்டிற்கு தற்போது உபரி நீரை மட்டுமே வழங்கி உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் மாதாந்திர தண்ணீரை விடுவித்ததாக கணக்கில் காட்டி கர்நாடக அரசு தப்பித்து வருகிறது.

மேகதாது அணை கட்டப்பட்டால் உபரி நீரும் தமிழ்நாட்டுக்கு வராமல் தடுத்து விட முடியும் என்கிற உள்நோக்கத்தோடு கர்நாடகம் செயல்படுகிறது. எனவே தமிழக அரசு இதில் உடனடியாக முழு கவனம் செலுத்தி தமிழக மக்களுக்கும், விவசாயத்திற்கும் தேவையான தண்ணீரை பெற்றுத் தர வேண்டும். தமிழ்நாட்டில் மேட்டூர் அணைக்கு கீழே அணைகள் கட்டி தண்ணீரைத் தேக்க இயலாது என்பது நாம் அனைவரும் அறிந்ததே. அதே நேரத்தில் பெருந்தலைவர் காமராஜர் தனது ஆட்சிக் காலத்தில் ஒகேனக்கலுக்கு மேலே கிருஷ்ணகிரி மாவட்ட வன எல்லையில் ராசிமணல் அருகே புதிய அணை கட்டி 63 டிஎம்சி தண்ணீரை மேட்டூர் அணை நிரம்பிய பிறகு உபரி நீர் வெளியேற்றக் கூடிய சூழலில் ராசிமணல் அணையில் தேக்குவதற்கான திட்டத்தின் அடிப்படையில் அடிக்கல் நாட்டியுள்ளார்.

அவ்வாறு தேக்கப்படும் தண்ணீர் மேட்டூர் அணை மூலமாகப் பாசனத்திற்கு பயன்படுத்த முடியும். உபரி நீர் கடலில் கலப்பதை மிகைப்படுத்தி மேகதாது அணை கட்ட எடுக்கும் முயற்சியைத் தடுத்து நிறுத்தும் அடிப்படை நோக்கோடு தமிழ்நாட்டில் ராசிமணலில் அணை கட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதனையும் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு உடனடியாக ராசிமணல் அணை கட்டுமான பணிக்கு ஒத்தக்கருத்தை உருவாக்கிடப் போர்க்கால நடவடிக்கைகளைத் துவங்கிட வேண்டும். என குறிப்பிட்டுள்ளார்.

# தமிழகத்தில் அரசு மதுபானக் கடைகளை படிப்படியாக குறைக்க வேண்டும்: திருமாவளவன்



சென்னை, செப். 13

வி.சி.க. தலைவர் திருமாவளவன் தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்து இருப்பதாவது;

2024 அக்டோபர் 2 ஆம் நாள் நடக்கவிருக்கும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மகளிரணியான 'மகளிர் விடுதலை இயக்கத்தின்' மாநாடு மது போதைப் பொருட்கள் ஒழிப்பை மையமாகக் கொண்டு நடத்தப்பட உள்ளது. விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நீண்டகாலமாகவே இதை வலியுறுத்தி வருகிறது.

குடிப்பதை நாம் ஒழுக்கப் பிரச்சனையாக மட்டும் பார்க்கவில்லை. குடிப்பவர்கள் கெட்டவர்கள் குடிக்காதவர்கள் நல்லவர்கள் என்று இந்தப் பிரச்சனையை எளிமைப்படுத்தவில்லை. குடி முதன்மையாக ஒரு பொருளாதாரப் பிரச்சனையாகும். ஏழை மக்கள் உழைத்து சம்பாதிக்கும் பணம் அவர்களிடம் மிச்சம் மீதி ஏதுமில்லாமல் மதுப் பழக்கத்தால் உறிஞ்சப்படுகிறது.

கிராமங்களில்தான் அதிகம் விதவைகள் இருக்கிறார்கள், பெண்கள் குடும்பத் தலைவர்களாக இருக்கும் குடும்பங்கள் கிராமங்களில் அதிகம். அதற்கு முக்கியமான காரணம் குடிதான். கிராமப்புறங்களில் ஆண்கள் குடித்தே குறை வயதில் செத்துப்போகிறார்கள். இந்தத் தீமையை உணர்ந்ததால்தான் புரட்சியாளர் அம்பேத்கர், காந்தியடிகள் முதல் ஐயா எல்.இளையபெருமாள் வரை அனைத்துத் தலைவர்களும் மதுவிலக்கை வலியுறுத்தினார்கள்.

நாடு முழுவதும் மதுவிலக்கைக் கொண்டுவர வேண்டும் என்றுதான் அரசமைப்புச் சட்டம் கூறுகிறது. அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 47 அதைத்தான் வலியுறுத்துகிறது.

சாராயம் குடித்து இறந்து போனவர்களுக்கு அரசே ரூ.10 லட்சம் தருவது ஏற்புடையது அல்ல. அரசே மதுபானக்கடை நடத்தி குடிப்பழக்கத்திற்கு பழக்கப்படுத்தி அதுவே பாழாக்கி வருகிறது. இந்தியா முழுவதும் மதுவிலக்கு கொள்கையை அமல்படுத்த வேண்டும். தமிழகத்தில் அரசு மதுக்கடைகளை படிப்படியாக குறைக்க வேண்டும்."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சென்னையில் 14ந்தேதி பொது விநியோகத் திட்ட மக்கள் குறைதீர் முகாம்: தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, செப். 13

தமிழக அரசின் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இயக்குநர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

"பொது விநியோகத் திட்டத்தின் பயன்களை குடிமக்கள் எளிதில் பெறும் வகையில் தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு வட்டத்திலும் மக்கள் குறைதீர் முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது.

அதன்படி செப்டம்பர் 2024 மாதத்திற்கான மாதாந்திர பொது விநியோகத் திட்ட மக்கள் குறைதீர் முகாம் சென்னையில் உள்ள உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் 19 மண்டல உதவி ஆணையாளர் அலுவலகங்களில் 14.09.2024 அன்று காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை நடைபெறவுள்ளது.

குடும்ப அட்டைகளில் பெயர்சேர்த்தல், பெயர்நீக்கம், முகவரிமாற்றம், கைபேசி எண்பதிவு / மாற்றம் செய்தல் உள்ளிட்ட பொது விநியோகத் திட்டம் தொடர்பான சேவைகள் மேற்கொள்ளப்படும். மேலும், நியாய விலைக் கடைகளில் பொருள் பெற நேரில் வருகை தர இயலாத மூத்த குடிமக்கள் உள்ளிட்டோருக்கு அங்கீகாரச் சான்று வழங்கப்படும்.

மேலும், பொதுவிநியோகக் கடைகளின் செயல்பாடுகள், தனியார் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளில் குறைபாடுகள் குறித்த புகார்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை பொதுமக்கள் இம்முகாமில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சென்னையிலுள்ள 19 மண்டல அலுவலகப்பகுதிகளில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் இச்சேவையினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமைச்சர் உதயநிதி ஆய்வு எதிரொலி: 4 பேர் இடமாற்றம்



மதுரை, செப். 13

மதுரை மாவட்டத்தில் பல்வேறு வளர்ச்சிப்பணிகள் குறித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, 4 அலுவலர்கள் பணிகளில் தொய்வுடன் பணியாற்றியது தெரியவந்தது.

இந்த நிலையில், பணிகளில் தொய்வில் காரணமாக 4 அலுவலர்கள் பணியிட மாற்றம் செய்யப்பட்டு உள்ளனர். மதுரையை சேர்ந்த வருவாய் வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர், சுகாதார ஆய்வாளர் மற்றும் சமையலர் ஆகியோர் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், இரண்டு விடுதி காப்பாளர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

தினகனி



# தஞ்சையில் ரூ.35 கோடி செலவில் புதிய தகவல் தொழில்நுட்ப பூங்கா: செய்தியாளர்கள் பயணத்தின்போது கலெக்டர் ஆய்வு



தஞ்சாவூர்,செப்.13

தஞ்சை நடராஜபுரத்தில் இயங்கி வரும் சர்டோனிக்ஸ் டெக்னாலஜிஸ் என்ற மென்பொருள் தயாரித்தல் நிறுவனம் ரூ.35 கோடி திட்டம் மதிப்பில் ரூ.33 இலட்சம் மானியத்துடன் 2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம் ஆகும்.

இந்நிறுவனம் தற்போது தஞ்சை அருகே மணக்கரம்பை ஊராட்சி பகுதியில் 5 தளங்களில் இயங்கி வருகிறது. இந்நிறுவனத்தில் பணியாளர்களான மென்பொருள் பணியில் ஈடுபடுகிறவர்களை மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டு பணிபுரிவோர்களை பாராட்டினார்கள். பின்னர் மாவட்ட கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம் கூறியதாவது:

டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர். மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களிலிருந்து மென்பொருள் தொடர்பாக படித்துவரும் இளைஞர்களுக்கு பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பினை. முன்னுரிமையின் அடிப்படையில் வழங்கி வருகிறது. மேலும், வெளி மாவட்ட இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பினை அளித்து வருகிறது.

கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ.35 கோடி அளவிலான திட்ட மதிப்பீட்டில் மாவட்ட தொழில் மையம் மூலமாக தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து தற்போது தஞ்சை மாவட்டம் மணக்கரம்பையில் இரண்டு ஏக்கர் பரப்பளவிலான ஆறு மாடி அடுக்குகளுடன் பல்வேறு வசதிகளைக் கொண்ட தகவல் தொழில்நுட்ப பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

இத்தொழில்நுட்ப பூங்கா மூலம் தற்போது 300க்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்து வருகிறது. இனிவரும் காலங்களில் இந்த எண்ணிக்கை 2 ஆயிரத்துக்கும் மேலாக அதிகரிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிறுவனத்திற்கு கடனுதவியாக ரூ.35 கோடி மதிப்பீட்டில் அரசு வழங்கும் முதலீட்டு மானியம் ரூ.33 லட்சம் வழங்கப்பட்டது. இவ்வாறு அவர் கூறினார்.

பின்னர் சர்டோனிக்ஸ் டெக்னாலஜிஸ் நிறுவன இயக்குநர் முகமது ஹனீஃபா கூறியதாவது:தஞ்சாவூர் மாவட்டத்தில் எமது நிறுவனம் அமைப்பதற்கு உதவிய தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றி. 2011ஆம் ஆண்டு இரண்டு ஊழியர்களுடன் ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது 300 ஊழியர்களுடன் மென்பொருள் சம்பந்தமான சேவைகள், பொருட்கள், - போன்றவற்றை செய்து வருகின்றது. இந்நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படும் 100க்கும் மேலான நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. தமிழ்நாடு முதல்வர் நடத்திய உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் தமிழக அரசுடன் ரூ.35 கோடியிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. தங்கள் நிறுவனத்திற்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்த தமிழ்நாடு முதல்வருக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு அவர் கூறினார். அப்போது திட்ட மேலாளர் குலோத்துங்கன் மற்றும் பலர் உடன் இருந்தனர். பின்னர்

கரந்தையில் வேலன் டைல்ஸ் நிறுவனத்தினை மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டார்.

படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் மூலம் ரூ.7.09 இலட்சம் மானியம் ரூ.1.77 இலட்சம் கடனுதவியுடன் மாவட்ட தொழில் மையம் மூலமாக இந்தியன் வங்கி உதவியுடன் நடைபெற்று வருகிற இந்நிறுவனம் வேலைவாய்ப்பு உருவாக்கி தந்துள்ளதாகவும், இத்திட்டத்தின் கீழ் உதவிய தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றி எனவும் எஸ்.ரேவதி மாவட்ட ஆட்சியரிடம் தெரிவித்தார்.



நீலகிரி மாவட்டம் பிக்கட்டி பேரூராட்சி பிக்கட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் நாய் மற்றும் பாம்பு கடிக்கு மருந்துகள் இருப்பில் உள்ளனவா? என்பது குறித்து மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# அரசு உதவி பெறும் பள்ளியில் இருந்து 4 மாணவிகள் மாயம்

கடலூர், செப். 13

கடலூர் மாவட்டத்தில் அரசு உதவி பெறும் பள்ளியில் இருந்து 4 மாணவிகள் மாயமாகி உள்ளனர்.

4 மாணவிகளும் பள்ளியில் இருந்து செல்லும் வீடியோவை வைத்து பேருந்து நிலையம் மற்றும் ரெயில் நிலையங்களில் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



4 மாணவிகளின் புகைப்படங்களும் அனைத்து காவல்நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டு, அவர்களை கண்டால் உடனடியாக தகவல் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக விழுப்புரம் உள்பட 4 மாவட்டம் மற்றும் புதுச்சேரியிலும் போலீசார் உஷார்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் மாணவிகள் விரைவில் பத்திரமாக மீட்கப்படுவர் என்று அவர்களின் பெற்றோரிடமும், ஆசிரியர்களிடமும் போலீசார் உறுதியளித்துள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆயுள் தண்டனை கைதியை சித்திரவதை செய்த புகாரில் வேலூர் சிறைத்துறை டிஐஜி ராஜலட்சுமி காத்திருப்பு பட்டியலுக்கு மாற்றம்

வேலூர், செப். 13

ஆயுள் தண்டனை கைதியை சித்திரவதை செய்த புகாரில் வேலூர் சிறைத்துறை டிஐஜி ராஜலட்சுமி காத்திருப்பு பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளார். கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளியை சேர்ந்த சிவகுமார், கொலைவழக்கில்ஆயுள் தண்டனை பெற்று வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அந்த சிறையில் டிஐஜியாக இருந்த ராஜலக்ஷ்மியின் வீட்டிற்கு வேலை செய்வதற்காக சிவக்குமார் அழைத்துச் சொல்லப்பட்டிருக்கிறார். அப்போது ராஜலட்சுமி வீட்டில் இருந்து 4.25 லட்சம் பணம் , நகை மற்றும் வெள்ளி பொருட்கள் திருடியதாக கூறப்படுகிறது. தொடர்பாக விசாரணை நடத்தியதில் திருடிய பணத்தை கைதி சிவக்குமார் மண்ணில் புதைத்து வைத்திருந்ததாகவும், பின்னர் அந்த நகைகளை மீட்டதாகவும் சிறைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த விவகாரத்தின்போது சிறைத்துறை அதிகாரிகள் மற்றும் சிறைக் காவலர்கள் கைதி சிவகுமாரை கடுமையாக தாக்கியதாக கூறப்படுகி றது. இது குறித்து தகவல் அறிந்த சிவகுமாரின் தாய், தனது மகனை திருடியதாகக் கூறி அவரை சித்திரவதை செய்ததாக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். பின்னர் உயர்நீதி மன்ற உத்தரவுப்படி, இதை தொடர்பாக வேலூர் தலைமை நீதித்துறை நடுவர் சிறைக்குச் சென்று நேரில் விசாரணை நடத்தி அதன் அறிக்கையை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்தார். இதனை அடுத்து இந்த விவகாரம் தொடர்பாக சிபிசிஐடி போலீசார் விசாரணை செய்து அரசுக்கு வரும் 17ஆம் தேதிக்குள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று உயர் நீதிமன்ற நீதிபதிகள் உத்தரவிட்டனர். இதனிடையே சிவக்குமார் சேலம் மத்திய சிறைக்கு மாற்றப்பட்டார்.



அவரிடம் விசாரணை நடத்துவதற்காக நேற்று முன்தினம்( செப். 10) காலை சிபிசிஐடி எஸ். பி., வினோத் சாந்தாராம் தலைமையில் சென்னை டிஎஸ்பி சசிதர், சேலம் டிஎஸ்பி சென்னித் இளங்கோ மற்றும் வேலூர் சிபிசிஐடி ஆய்வாளர் இந்திரா உள்ளிட்ட 6 பேர் கொண்ட குழுவினர் சேலம் மத்திய சிறைக்கு சென்று கைது சிவக்குமாரிடம் விசாரணை நடத்தினர். தொடர்ந்து நேற்று (செப்.11) வேலூர்சிறையிலும் சிபிசிஐடி போலீசார் விசாரணை நடத்த தினர். இந்நிலையில் வேலூர் சரக டிஐஜி ராஜலக்ஷ்மி உள்பட 14 பேர் மீது 5 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கின் அடிப்படையில் சிபிசிஐடி போலீசார் விசாரணை மேற்கொண்டு வரும் நிலையில், டிஐஜி ராஜலட்சுமி காத்திருப்பு பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளார். சிறையில் கைது சித்திரவதை செய்யப்பட்டதாக எழுந்த புகாரை அடுத்து சிறைத் துறைடிஜிபிநடவடிக்கை எடுத்துள்ளார். மேலும், சென்னை சரக சிறைத் துரை டிஐஜி முருகேசன், வேலூர்சரகசிறைத்துறை டிஐஜியாக கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

# இரண்டு நிபந்தனைகள்...தனுஷ் மீதான ரெட் கார்டு நீக்கம்?



நடிகர்தனுஷ், ஏற்கனவே 80 சதவீத படப்பிடிப்பு முடிந்த நிலையில் படப்பிடிப்புக்கு வராமல் தயாரிப்பாளருக்கு நஷ்டம் ஏற்படுத்தியதாகவும் பிரபல தயாரிப்பு நிறுவனங்களிடம் அட்வான்ஸ் தொகைபெற்றுஅவர்களின்படங்களில்நடிக்காமல் இழுத்தடித்ததாகவும், அட்வான்ஸ் தொகையை திருப்பி கொடுக்காமல் இருந்ததாகவும் புகார் எழுந்தது.

இதையடுத்து தமிழ் திரைப்பட தயாரிப்பாளர் சங்கம் நடிகர் தனுஷுக்கு ரெட் கார்டு விதித்தது. இந்நிலையில், தனுஷுக்கு விதிக்கப்பட்டிருந்த ரெட் கார்டு நீக்கப்பட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, 'மெர்சல்' தயாரிப்பாளர்களுடன் தனது திட்டத்தை விரைவில் தொடங்குவது, 'பொல்லாதவன்' தயாரிப்பாளர்களிடம் இருந்து பெற்ற அட்வான்ஸ்தொகையைவட்டியுடன்திருப்பித்தருவதுஎனஇருநிபந்தனைகளுக்குதனுஷ்ஒப்புக்கொண்டதாக தகவல்கள் வெளியாகி இருக்கின்றன. இந்த இரு நிபந்தனைகளை தொடர்ந்து தனுஷ் மீது விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்க தயாரிப்பாளர் சங்கம் முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது..

# இங்கிலாந்துக்கு எதிரான முதல் டி20 : ஆஸ்திரேலிய அணி அபார வெற்றி



ஆஸ்திரேலிய அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 3 போட்டிகள் கொண்ட டி20 தொடர் மற்றும் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள்தொடரில்விளையாடுகிறது. இருஅணிகளுக்கு இடையிலான முதல் டி20 போட்டி இன்று நடைபெற்றது . டாஸ் வென்ற இங்கிலாந்து பந்துவீச்சை தேர்வு செய்தது.அதன்படி, முதலில் களமிறங்கிய ஆஸ்திரேலியா அணி அதிரடியாக விளையாடியது. தொடக்க ஆட்டக்காரர் டிராவிஸ் ஹெட் 19 பந்தில் அரை சதமடித்தார். அவர் 23 பந்தில் 59 ரன் எடுத்து ஆட்டமிழ்ந்தார்..முதல் விக்கெட்டுக்கு மேத்யூ ஷாட்ஹெட் ஜோடி 86 ரன்களை சேர்த்தது. ஷாட் 41 ரன்னில் ஆட்டமிழ்ந்தார்.தொடர்ந்து கேப்டன்மிட்செல் மார்ஷ் ஒரு ரன்னிலும், ஸ்டோய்னிஸ் 10 ரன்னிலும் வெளியேறினர். கடைசிகட்டத்தில் பொறுப்புடன்ஆடிய ஜோஷ் இங்கிலிஸ் 37 ரன்னில் ஆட்டமிழந்தார்.இறுதியில், ஆஸ்திரேலியா அணி 19.3 ஓவரில் 179 ரன்களுக்கு ஆட்டமிழந்தது . இதையடுத்து, 180 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து களமிறங்கியது .

அந்த அணியின் முன்னணி வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். லிவிங்ஸ்டோன் மட்டும் 37 ரன்கள் எடுத்தார். பிலிப்சால்ட் 20 ரன் எடுத்தார்.இறுதியில், இங்கிலாந்து 19.2 ஓவர்களில் 151 ரன்களுக்கு ஆட்டமிழந்தது இதன்மூலம் 28 ரன்கள் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியா வெற்றி பெற்றதுடன் டி20 தொடரில் 10 என முன்னிலை பெற்றது.

ஆஸ்திரேலியா சார்பில் சீன் அபாட் 3 விக்கெட்டும், ஆடம் ஜாம்பா, ஹேசில்வுட் தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

# ஆளும் புதுசு.. ஆட்டமும் புதுசு': பிக்பாஸ் 8வது சீசனின் புரோமோ




உலகளவில் பிரபலமான பிக்பாஸ் நிகழ்ச்சி, இந்திய மொழிகளிலும் நடைபெற்று வருகிறது. தமிழில் பிரபல தொலைக்காட்சியில் 2016 ம் ஆண்டு முதல் ஒளிபரப்பாகி வந்த பிக்பாஸ் நிகழ்ச்சியை நடிகர் கமல்ஹாசன் தொகுத்து வழங்கி வந்தார். வெறும் பொழுதுபோக்கு அம்சத்திற்காக இல்லாமல்பலசினிமாஅனுபவங்களையும்புத்தகங்களையும் தொடர்ந்து அறிமுகப்படுத்தினார்.

தொகுப்பாளராக கடந்த 7 ஆண்டுகளாக பொறுப்பு வகித்த பிக்பாஸ் நிகழ்ச்சியிலிருந்து விலகுவதாக சமீபத்தில் கமல்ஹாசன் அறிவித்தார். இதனையடுத்து, கமல்ஹாசனுக்கு பதில் யார் பிக் பாஸ்' நிகழ்ச்சியை தொகுத்து வழங்குவார் என ரசிகர்கள் எதிர்பார்த்து காத்திருந்தனர். இதனையடுத்து பிக் பாஸ் 8வது சீசனை நடிகர் விஜய் சேதுபதி தொகுத்து வழங்க உள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. ~தல் முறையாக விஜய் சேதுபதி பிக் பாஸ் நிகழ்ச்சியை தொகுத்து வழங்க உள்ளதால் பிக் பாஸ் 8வது சீசன் மீதானஎதிர்பார்பபுரசிகர்களிடையேஅதிகமாகஉள்ளது.பிக்பாஸ்8வதுசீசனின்புரோமோவெளியாகியுள்ளது. இது தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

# அர்ஜூன் தாஸ், அதிதி சங்கர் இணைந்து நடிக்கும் படத்தின் படப்பிடிப்பு நிறைவு



தமிழில் மாஸ்டர், கைதி, விக்ரம் உள்ளிட்ட படங்களில் நடித்ததன் மூலம் ரசிகர்கள் மத்தியில் பிரபலமான அர்ஜூன் தாஸ், அநீதி, ரசவாதி போன்ற பல படங்களில் கதாநாயகனாக நடித்தார். தற்போது அர்ஜூன் தாஸ் நடிப்பில் புதிய திரைப்படம் ஒன்று உருவாகி இருக்கிறது.

இந்த படத்தில் அர்ஜூன் தாஸுக்கு ஜோடியாக இயக்குனர் ஷங்கரின் இளைய மகள் அதிதி ஷங்கர் நடித்துள்ளார். 'குட் நைட் ' மற்றும் 'லவ்வர்' திரைப்படங்களை தயாரித்த மில்லியன் டாலர் ஸ்டுடியோஸ் நிறுவனம் இப்படத்தை தயாரிக்கிறது. அறிமுக இயக்குனர் விக்னேஷ் ஸ்ரீகாந்த்இயக்கத்தில்உருவாகும்இந்ததிரைப்படத்திற்கு'புரொடக்சன் நம்பர் 4' என தற்காலிகமாக பெயரிடப்பட்டுள்ளது.

ஹேஷம் அப்துல் வாகப் இந்தப் படத்திற்கு இசையமைத்துள்ளார். இந்நிலையில், இப்படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளதாக தயாரிப்பு நிறுவனம் புகைப்படம் வெளியிட்டு தெரிவித்துள்ளது. தற்போது இந்த புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.

அதிதி ஷங்கர் ஏற்கனவே கார்த்தியின் விருமன், சிவகார்த்திகேயனின் மாவீரன் உள்ளிட்ட படங்களில் நடித்திருந்தார். மேலும், அதர்வாவின் சகோதரரான ஆகாஷ் முரளியுடன் இணைந்து நேசிப்பாயா எனும் திரைப்படத்தில் அதிதி ஷங்கர் நடித்து வருகிறார்.

# உலகக் கோப்பை கால்பந்து தகுதி சுற்று: அர்ஜென்டினா அதிர்ச்சி தோல்வி



23வது உலகக்கோப்பை கால்பந்து போட்டி 2026ம் ஆண்டு ஜூன், ஜூலை மாதங்களில் அமெரிக்கா, கனடா, மெக்சிகோ ஆகிய 3 நாடுகளில் நடக்கிறது. மொத்தம் 48 நாடுகள் பங்கேற்கின்றன. போட்டியை நடத்தும் நாடுகளை தவிர மற்ற அணிகள் தகுதி சுற்று மூலமே தேர்வாகும்.

தற்போது தகுதி சுற்று பல்வேறு நாடுகளில் நடக்கின்றன. இதில் தென்அமெரிக்க கண்டத்துக்கான தகுதி சுற்றில் 10 அணிகள் இடம் பெற்றுள்ளன. லீக் முடிவில் முதல் 6 இடங்களை பிடிக்கும் அணிகள் நேரடியாக உலகக் கோப்பைக்கு தகுதி பெறும்.

இதில் பரான்கியாவில் நேற்று நடந்த ஒரு ஆட்டத்தில் கொலம்பியா, 'நம்பர் ஒன்' அணியும், உலக சாம்பியனுமான அர்ஜென்டினாவை சந்தித்தது. உள்ளூர் ரசிகர்களின் உற்சாகத்துடன்களம் புகுந்த கொலம்பியா 25வது நிமிடத்தில் கோல்அடித்தது. அந்த அணியின்யர்சென்மோஸ்கியராகோல்அடித்தார். தொடர்ந்து ஆட்டத்தின் 48வது நிமிடத்தில் அர்ஜென்டினாவின் நிகோ கோன்சலேஸ் பதில் கோல் அடித்தார்.

ஆட்டத்தின் 60வது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பை கொலம்பியா கேப்டன் ஜேம்ஸ் ரோட்ரிக்ஸ் கோலாக்கினார். இதனால் கொலம்பியா 21 என்ற கோல் கணக்கில் அர்ஜென்டினாவை வீழ்த்தியது.அர்ஜென்டினா அணியில் நட்சத்திர வீரர் லயோனல் மெஸ்சி காயம் காரணமாக ஆடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த பிரிவில் ஒவ்வொரு அணியும் இதுவரை தலா 8 ஆட்டங்களில் விளையாடியுள்ளன. அர்ஜென்டினா 18 புள்ளிகளுடன் (6 வெற்றி, 2 தோல்வி) முதலிடத்தில் நீடிக்கிறது. கொலம்பியா 2வது இடத்திலும், உருகுவே 3வது இடத்திலும் உள்ளன

# ஹாங்காங் ஓபன்: சுமித் சிக்கி ரெட்டி ஜோடி அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம்



ஹாங்காங் ஓபன் பேட்மிண்டன் தொடர் ஹாங்காங்கில் நடைபெற்று வருகிறது.இந்த தொடரில் நேற்று நடந்த கலப்பு இரட்டையர் பிரிவில் முதல்சுற்றில் இந்தியாவின்சுமித் ரெட்டி, சிக்கி ரெட்டி ஜோடி சகநாட்டு கிருஷ்ணபிரியா கூடாரவல்லி, தருண் கோனா ஜோடியுடன் மோதியது.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய சுமித் ரெட்டி, சிக்கி ரெட்டி ஜோடி 21-9, 21-10 என்ற கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.